LIVEWORKSHEETS



*பாடநூல் பக்கம் 62* - பாடம் 3: நாம் அறிவோம் (குறில், நெடில் சொற்கள்)

**குறில், நெடில் சொற்களைக் கொண்டு வாக்கியத்தை நிறைவு செய்க.**

1. ______________ பிடித்த தங்கையுடன் ______________ சுமந்து நடந்தாள் நங்கை.
2. ______________ வேட்டி கட்டி வந்த ஆடவன் ஒரு ______________ பாடினான்.
3. ______________ கொண்ட வீரன் சிரிப்புடன் ______________ கடந்து சென்றான்.
4. ______________ ஆட்டி வந்த ஞமலி ஒன்று ______________யில் சிக்கியது.
5. அமலன் ______________யில் வைத்திருந்த ______________யை இறுக்கினான்.
6. ______________யைத் தாண்டிய மறவனின் ______________யில் காயம் ஏற்பட்டது.
7. ______________ வேளையில் ______________ ஓரமாய் தென்றல் வீசியது.
8. ______________ வைத்த தாத்தா ______________ ஊன்றி நடந்தார்.
9. ______________ குடித்தால் ______________ உறுதியாகும் என்றார் மருத்துவர்.
10. சிவன் ______________ தடுக்கி விழுந்ததால் அவனது ______________ காயமானது.

| | | | | |
|---|---|---|---|---|
| **தடி** | **தாடி** | | **தடை** | **தாடை** |
| **மலை** | **மாலை** | | **பல்** | **பால்** |
| **கல்** | **கால்** | | **பலம்** | **பாலம்** |
| **பட்டு** | **பாட்டு** | | **குடை** | **கூடை** |
| **வலை** | **வாலை** | | **முட்டை** | **மூட்டை** |

--ஆக்கம்: திருமதி ஜமுனா மாதவன்-- கேப்பிஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி--

LIVEWORKSHEETS



*பாடநூல் பக்கம் 63&64* - பாடம் 4: **செய்யுளும் மொழியணியும் (இணைமொழிகள்)**

**<u>பொருத்தமான இணைமொழியைக் கொண்டு வாக்கியத்தை நிறைவு செய்க.</u>**

| | | |
|---|---|---|
| ***<u>பாட விளக்கம்:</u>*** | **தாயும் சேயும்** | – அன்னையும் குழந்தையும் |
| | **அல்லும் பகலும்** | – இரவும் பகலும் / எப்பொழுதும் |
| | **நன்மை தீமை** | – நல்லது கெட்டது |



1. சுபத்திரை தன் கர்ப்பக் காலத்தில் ________________________ துணிவோடு போர் புரியும் பயிற்சியில் ஈடுபட்டாள்.
2. அர்ஜுனன் கூறும் பல வீரதீரக் கதைகளைக் கேட்டு ________________________ மகிழ்வடைந்தனர்.
3. வில்வித்தையில் சிறந்து விளங்கிய அபிமன்யு எக்காரியத்திலும் ________________________ ஆராய்ந்து செயல்பட சுபத்திரை துணைபுரிந்தாள்.
4. ________________________ ஆராயாமல் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையான வளவன் இன்று தன் தவற்றை எண்ணி வருந்தினான்.
5. ஏழையாக இருந்த ஒரு வலைஞன் ________________________ பாடுபட்டு உழைத்து பல சொத்துகளுக்கு அதிபதியானான்.
6. நிலநடுக்கம் ஏற்பட்டபோது கட்டட இடிபாடுகளில் சிக்கிய ________________________ நலமுடன் மீட்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| **அல்லும் பகலும்** | **தாயும் சேயும்** | **நன்மை தீமை** |
| **அல்லும் பகலும்** | **தாயும் சேயும்** | **நன்மை தீமை** |

--ஆக்கம்: திருமதி ஜமுனா மாதவன்-- கேப்பிஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி--

LIVEWORKSHEETS



## *பாடநூல் பக்கம் 65&66* - பாடம் 5: இலக்கணம் (காலங்கள்)

**<u>கொடுக்கப்பட்ட வாக்கியங்களுக்குப் பொருத்தமான காலத்திற்கு வட்டமிடுக.</u>**

***<u>பாட விளக்கம்:</u>*** காலங்கள் 3 வகைப்படும்.

**இறந்த காலம்** - ஒரு செயல் அல்லது தொழில் நடந்து முடிந்துவிட்டதைக் காட்டுவது. (எ.கா: பாடினான், நடந்தன, கேட்டாள், ஆடினர், சென்றது)

**நிகழ்காலம்** - ஒரு செயல் அல்லது தொழில் நடைபெற்றுக் கொண்டிருப்பதைக் காட்டுவது. (எ.கா: பாடுகிறான், நடக்கின்றன, கேட்கிறாள், ஆடுகின்றனர், செல்கிறது)

**எதிர்காலம்** - ஒரு செயல் அல்லது தொழில் நடைபெறவிருப்பதைக் காட்டுவது. (எ.கா: பாடுவான், நடக்கும், கேட்பாள், ஆடுவர், செல்லும்)

| | | | |
|---|---|---|---|
| 1. விமலன் பந்து விளையாடுகிறான். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 2. மாணவர்கள் வரிசையில் நின்றனர். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 3. புலி இரை தேடியது. | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 4. நான் சாதம் சமைப்பேன். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 5. விஜயா வெற்றி பெற்றாள். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 6. நாங்கள் சுற்றுப்பயணம் செல்வோம். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 7. முதியவர்கள் நகுலனுடன் பேசுகின்றனர். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 8. செடியில் பூக்கள் பூத்தன. | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 9. வாத்து குளத்தில் நீந்துகிறது. | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 10. பாடகர்கள் பாடல் பாடுகிறார்கள். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 11. பாட்டி நாளை வருவார். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| 12. திங்கட்கிழமை இணையம் துண்டிக்கப்படும். | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |

--ஆக்கம்: திருமதி ஜமுனா மாதவன்-- கேப்பிஸ் தோட்டத் தமிழ்ப்பள்ளி--